உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அள] யாழ்ப்பாணம்: இராக்ஷத ஞு மாசிமீ சஉ வெள்ளிக்கிழமை (13-2-1976) [இல: சஉ

# மூவகை நிறைவும் பெற்றவர்

## பேராசிரியர் அவர்கட்கு பண்டிதமணி அவர்கள் பாராட்டு

"விநாயகப் பெருமானின் திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டு,

கனம் பொருந்திய கலைச் செல்வர்களான தலைவர் அவர்களுக்கும் உபசரணைக் குரியவர்கள் எவர்களோ அவர்களுக்கும் கண்ணியம் நிறைந்த சபையோர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"குரு பக்தி, தெய்வ பக்தி, பெரியோர்களின் ஆசி ஆகிய மூன்றும் ஒன்றிலொன்று தாழாது நிறைவு பெற்றவர்கள் எங்கள் மதிப்புக்குரிய பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்" என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களுக்கு அனுப்பிவைத்த பாராட்டு விழாச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்கள்

மேலும் அச்செய்தி வருமாறு:—

வியாகரணத்தில் மாத்திரமன்றி காவியத்துறைகள் சமயத்துறைகளிலும் நற்குண நற்செயல்களிலும் சிரோமணியாய் விளங்குபவர்கள பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரியார் அவர்கள். 36 ஆம ஆண்டு [illegible]நாடக்கம் சாஸ்திரியார் அவர்களோடு எனக்கு நெருங்கிய தொடர்புண்டு அப்பொழுதே இளம பவத்தினராய குருக்கள அவர்களுக்கு, சாஸ்திரியார் அவர்களிடம மூளை கொண்டகுரு பக்தியை அவதானித்ததுணடு. அது,குருக்கள் அவர்கள் பெரிய அநதஸ்தை அடைந்த காலத்திலும் அணுத்துணையும குறையாது மலைபளவாகப் பெருகிக் கொண்டேயிருக்கிறது. குருக்கள் அவர்கள தம் பூசை அறையின் ஒழுங்குகளைக் காட்டித் தம குரு அமைத்துதவிய திறத்தைச் சொன்ன போது எனக்கு உரோமஞ் சிலிர்த்தது. குரு பகதி இருந்தவாறு!

x x x

குருக்கள் அவர்கள் இரவு இரண்டு மணிக்குப் பூசையை ஆரமபித்து விடுகின்றார்கள் காலை ஏழு மணி வரை பூசையிலும் மந்திர ஜெபத்திலும தியானத்திலும காலம கழிவது தெரியாமலே கழிகின்றது.

தெய்வ பகதி இருந்தவாறு

x x x

குருக்கள் அவர்கள் நாள் தோறும் மாலையில் நல்லூருககு நடந்து சென்று' அம்பிகையையும சுவாமியையும் தரிசனஞ் செய்து

(வளர்ச்சி 2ஆம பக்கம்)

## திருத் தேர் வெள்ளோட்டம்

சுழிபுரம்-மேற்கு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயில் திருத் தேர் வெள்ளோட்டமும் கந்தப் புராண படன பூர்த்தியும் இன்று (13-2-76 நடைபெறுகின்றன. மாலை மூன்று மணிமுதல் பிரசங்கங்கள் நடைபெறும்,

## சிவ தீட்சை

ஆண்டுதோறும் சுழிபுரம் வேற்படையினர் சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலிற் பங்குனி உத்தரத்தன்று சிவதீட்சை வைத்து வருவது யாவரும் அறிந்ததே இவ்வாண்டும் பங்குனி உத்தரத்தன்று சிவ தீட்சை நடைபெறும்

## அம்பிகையின் அருள் பெற்றவர் கலாநிதி கைலாசநாதக் குருக்கள்

### பாராட்டு விழாவில் கி. வா. ஜ.

'அம்பி[illegible] [illegible] பணிந்து பேரருள பெற்றவர் அம்பிகையின் அருளைப் பெறுவதிலு பார்க்கப் பெருமபேறு வேறொன்றும இலை, இலங்கைப் பலகலைக கழக யாழ் வளாகத்தில இந்து நாகரிகத்துறைப் பேராசிரியராய்ப் பணிபுரியும் பெருமதிப்புக்குரிய கலாநிதி. கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் அம்பிகையின் உபாசகர் அவளது அருளைப் பெற்றவர்களான கலாநிதி குருக்கள் அவர்கள் கல்வி உலகில் நீண்டகாலம் தொடர்ந்தும் மேலான சேவை செய்ய அம்பிகை அருள் புரிவாராகுக"

இலங்கைப் பல்கலைக் கழக யாழ் வளாகத்தில இந்து நாகரிகத் துறைக்குப் பேராசிரியராய் நியமனம பெறற கலாநிதி பிரமமஸ்ரீ கா. கைலாசநாதக குருக்கள் அவர்களுககு எடுககப்பட்ட பாராட்டு விழாவுக்குத தலைமைதாங்கிப் பேசிய கலைமகள ஆசிரியர் கலாநிதி கி. வா ஜகநாதன மேற்கணடவாறு குறிப்பிட்டார்.

திருஞான சம்பந்தர் ஆதீன கர்த்தரது ஆசியுரையை அடுத்து பணடிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது பிரார்த்தனை உரையை ஆசிரியர் திரு. அ பஞ்சாட்சரம் படித்தார்.

பேராசிரியர் கா இந்திரபாலா பேசுகையில் கலாநிதி குருக்களையா அவர்கள் எனது குருஆவர். அவர் செய்த இரு நூல்கள் உயர்ந்தவை. இருகண்கள் போன்றவை. முதன்முதலாக இந்து நாகரிகத்துறைக்குப் பேராசிரியராய் கைலாசநாதக் குருக்கள் அவர்கள் நியமனம் பெற்றது மிகவும பாராட்டக்கூடிய விஷயமாகும் அவரது நியமனத்தைப் பல்கலைக் கழகம மிகவும் வரவேற்று உபசரித்தமையை உங்களுககுச்சுட்டிககாட்ட விருமபுகிறேன என்றார்;

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர்

(வளர்ச்சி 2ம் பக்கம்)

உ
சிவமயம்

## சைவ பரிபாலன சபை
### யாழ்ப்பாணம்
## விசேட பொதுக் கூட்டம்

சைவபரிபாலன சபையினது விசேட பொதுக் கூட்டம் இராக்ஷத வருடம் மாசி மாதம் 3-ம் தேதி (15-2-76) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி அளவில், சபையாரது நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## பண்டைக்காலப்பண்ணிசை-அதன் தற்கால நிலைமை

புதுப் பொலிவுடன் பண்ணிசை விளங்க வேண்டும

திருவருளின் அநுக்கிரகம் நிறைந்த சித்தியைத் தரப் பிரார்த்திப்போம்



"இசைச் செல்வர்" திரு. மு. குமாரசிங்கம் அவர்கள்
[இசைவாணர் ஸ்ரீ இ. அப்பாசாமி ஓதுவாமூர்த்தி அவர்களின் சீடன்]

(முன் வளர்ச்சி - 6)

'தற்காலத்தில் வழங்கும் பல இராகங்களுக்குத் தேவாரப் பண்கள் ஆதிலட்சியங்களாகுமென்றும், பண்களை இராகங்களை ஔடவ, ஷாடவ, சம்பூர்ணங்களென்று பிரிப்பதற்கும், சுத்த - சாயாலக - சங்கீர்ணங்களென்று பிரிப்பதற்கும் காரணமாயிருந்ததென்றும், இந்திய சங்கீத சரித்திரத்தில பாஷாங்கராகமென்பதை முதன்முதலில் தேவாரப் பண்களில காண்கிறோமென்றும, பிற்காலத்தில இராகங்களின் வளர்ச்சிக்குத் தேவாரப் பண்கள் மிக்க உதவியாயிருந்தனவென்றும, தேவாரப் பண்களிலி ரக்திராகங்களே முக்கியமாகக் காணப்படுகின்றனவென்றும், தேவாரப்பண்களெல்லாம ஜீவராகங்களாகையினால் அவைகள் எக்காலத்திலும் பாடப்பட்டு வருமென்பதற்கு ஐயமில்லையென்றும' - பேராசிரியர் P. சாம்பமூர்த்தி அவர்கள் கூறியிருப்பதும் ஈண்டு கவனிக்கத்தக்கது.

உயர்திரு. மு. ஏபிரகாம் பண்டிதர் அவர்கள், தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கத்தின் 1917 ம ஆண்டில் நடைபெற்ற மகாநாட்டில், இசைத் தமிழ் முறையைத் விளக்கிக் காட்டியதோடு, வட்டப்பாலை முறைப்படி 24 சுரஸ்தான மெட்டுக்களை வீணையில் அமைப்பித்துத் தம மக்களைக் கொண்டு பாடுவித்தும வீணையில் வாசிப்பித்தும்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே;
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஞூ மாசி மீ க-உ வெள்ளி

## ஆலய அமைப்புக்கு ஆகம நூல்

வேதாகம விதிப்படி ஒழுகுகின்ற சைவ சமயிகள் அறியவேண்டியன பல உள. இவற்றை உணர்வதற்கு இன்றியமையாத பெரும்பாலான நூல்கள் செந்தமிழ் மொழியில் இல்லாமையாற் பொதுமக்கள் விதிக்கப்பட்டன எவை விலக்கப்பட்டன யாவை என அறியமுடியாத நிலையிலிருக்கின்றனர். சிவாச்சாரியர்கள் சிறந்து பொலிந்துள்ள ஈழவள நாட்டில் சைவ மக்கள் பொதுவாக அறிய வேண்டிய வேத சிவாகம விதிகள் தமிழிலே தொகுக்கப்பெற்று நூல் வடிவமாக வெளியிடப்படுவதவசியம் அல்லவா?

நாவலர் நற்றகையார் ஆலய வழிபாட்டுக்கும் சைவ வாழ்க்கைக்கும் வேண்டப்படுவனவற்றை வினாவிடை, பாலபாடம், புராணசூசனம் முதலியவற்றாற் பொது மக்கள் அறிவுச் செறிவுக்கு அரும் பணி ஆற்றினர், சித்தாந்த வித்தகர் சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் சைவக் கிரியை விளக்கம் என்ற நூலிலே முக்கியமானவற்றைச் சுருக்கமாக எழுதியிருக்கின்றனர் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் முப்பொருள் விளக்கம் முதலிய நூல்களிலே சித்தாந்த சாத்திரத்தைத் தொகுத்துரைத்திருக்கின்றனர். இன்னும் அநேக அறிஞர்கள் மெய்கண்ட சாத்திரங்களை உரையுடன் வெளியிட்டிருக்கின்றனர். எனினும் கிரியா முறைகளிலே உறுதியான வரைவிலக்கணத்தை மக்கள் அறியாமலேயிருக்கின்றனர். என்னை? விளக்கம் தரும் நூல்கள் இல்லாமையினலேயே.

ஆலய அமைப்பும் பூசைமுறையும் பொதுமக்கள் அறியக்கூடிய முறையிலே தமிழ் நூலாக வெளிவருதல் நன்று. கோயில் உபயஞ் செய்பவர்கள் நிவிர்த்திக்கடன் என்றவகையிலே விக்கிரகங்களை அமைப்பதற்கு விரும்புவது வழக்கம் ஆனல் ஆகம முறைப்படி எந்த விக்கிரகம் எத்திக்கிற் பிரதிட்டை செய்யப்பட வேண்டும் என்றும் விநாயகர், சிவன் அம்பாள் சுப்பிரமணியர் ஆலயங்களிற் வெவ்வேறு முறைகள் உள ஆகையால் அவற்றிலே இந்த அமைப்பு எவ்வாறிருக்க வேண்டும் என்றும் பொது மக்கள் அறிவதற்கு வழியின்றி இடர்ப்படுகின்றனர்.

யாழ் நாட்டிலே நல்லையில் இப்பொழுதுள்ள குருகுலக் கலாசாலையிலே சிவப்பிராமண மாணக்கர்களுக்குக் கல்விபுகட்டும் சிவாச்சாரியர்கள் கலாசாலைக்கும் கற்போருக்கும் சைவ சமயிகளுக்கும் பயன்படக்கூடிய முறையிலே வட மொழியிலும் தென் மொழியிலும் அத்தியாவசியமான வேதாகம விதிகளை நூல் வடிவமாக வெளியிடுதல் நன்று.

---

## கலைக்கூடம் - நாதசுரம் தவில்

கலைகள் பலவற்றுக்கும் கல்லூரிகள் உள. ஆனல் நாதசுரம் தவில் என்னும் மங்கல வாத்தியங்களைப் பயிலுவதற்குக் கலாசாலை இந்நாட்டிலும் இல்லைத் தாயகத்திலும் இல்லை. தனிக்கலையாகக் குடும்ப மரபாக இற்றை வரைக்கும் பயிலப் பெற்ற நாதசுரம் தவில் வாத்தியக்கலை இதற்கான ஒரு கல்லூரியிற பயிர்ச்சிக்குரியதாக்குவதற்கு இசையாளர் எடுத்த முயற்சியைத் தொடர்ந்து வலிகாமம் வடக்கு வடபகுதிக் காரியாதிகாரி திரு. அமிர்தசாகரர் ஊக்கமளித்தவகையிலே மாவைக் கந்தன் ஆலயப் பிரகாரத்தில் உள்ள இசையாளர் மடத்திற் சென்ற புதன்கிழமை மாலை 6 மணியளவில் நாதசுரம் தவில் வாத்தியக் கலைக் கல்லூரி நிறுவப் பெற்றது,

மாவைக் கந்தன் ஆலயத்தில் மாலைப் பூசையுடன் ஆரம்பமாகி இசை வேளாளர் சங்கக் கொடி. பழம் பெரும் நாதசுர வித்துவான் திரு சு. க. இராசாவால் மங்கல வாத்திய மொலிக்க ஏற்றப் பெற்றது. தொடர்ந்து நாதசுரக் கலைப் பாடங்களை நாதசுர வித்வான் திரு. N.R. பத்மநாதனும் தவிற் கலைப் பாடங்களைத் தவில் வித்வான் திரு. N.R சின்னராசாவும் ஆரம்பித்து வைத்தனர்.

இசை வேளாளர் சங்கத் தலைவர் திரு. N. R. சின்னராசா தலைமையிற கூடிய பொதுக் கூட்டத்தில் வடமாநில அதிபர் திரு. லால்-விஜயபாலா, பேரவை உறுப்பினர் திரு. S. J. V. செல்வநாயகம், உதவி மாகாண அதிபதி திரு. ஆ. கந்தையா காரியாதிகாரி திரு N. அமுதசாகரன் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திரு. T. சண்முகசுந்தரம் B A திரு. நம. சிவப்பிரகாசம் சங்கீத பூஷணம் பி. சந்திரசேகரம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். சங்கச் செயலாளர் திரு. S. R ஞானசுந்தரம் வரவேற்புரை கூறினர்.

---

## மூவகைநிறைவும்

1 ஆம் பக்க வளர்ச்சி

கொண்டு தமது இருப்பிடத்துக்கு மீளுவது வழக்கம். வழியில் தியானமும், மானசிக செபமும் நடந்து கொண்டேயிருக்கும். அவர்களின் ஸ்பர் சாதிகளால் பிருதிவி முதலிய பஞ்சபூதங்கள் சைதந்ய நிலையை வெளிப்படுத்தல் சித்திக்கலாம். இவ்வாறு பஞ்சபூத சுத்தி சித்தித்தற்கு யாழ்ப்பாணம் செய்து வைத்த தவமே தவம்.

x x x

ஒரு நாள் மாலையில் குருக்கள் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பைத் தெய்வம் உதவியது. காஞ்சிப் பெரியவர்கள் சந்நிதியில் பெரியார்களின் பாதாரவிந்தங்களில் தமது சிரசைத் தாழ்த்தி வணங்கி முனைப்பகன்று பெரியார் மீது சம்ஸ்கிருதத்தில் தாம் செய்த தோத்திர பஞ்சகத்தால் துதி செய்து கிடந்ததும், பெரியவர்கள் தக்ஷிணாமூர்த்தியாய்ச் சின்முத்திரை காட்டி ஆட்கொண்டதும், 3 மணி நேரம் கழியாமற் கழிந்ததும் ஆகிய தெய்விக சம்பவத்தைத் தேன் சொட்டக் கேட்ட போது கொடிய ஆன்மா நோய் என்னை விலகி நின்றது. நான் வசமிழந்து விம்மித மெய்தினேன். ஆயிரம் முறை அச் சம்பவத்தைக் குருக்கள் அவர்கள் வர்ணித்தாலும் தெவிட்டாது தித்திக்கும் நிலை உண்டானது.

காஞ்சிப் பெரியார் அவர்களின் அநுக்கிரகமும், ஆசியையும் குருக்கள் அவர்கள்பால் அமைந்தவாறிருந்தவாறு.

x x x

இங்கே தலைமை வகிப்பவர்கள் குரு பக்தியிலும் முருக பக்தியிலும் நிறைவு பெற்றவர்கள்; பெற்றுக் கொண்டிருப்பவர்கள்.

குரு பக்தி, தெய்வ பக்தி காஞ்சிப் பெரியாரின் அநுக்கிரக ஆசி ஆகிய மூவகைச் சம்பத்துக்களு முள்ளவர்களின் தலைமையில், அந்த மூவகைச் சம்பத்தும் படைத்த குருக்கள் அவர்களுக்கு எவ்வகை ஆயத்தமுஞ் செய்யாமல் காத்திரப் பிரகாரம் பாராட்டு விழா ஒன்று கைகூடியிருப்பது தெய்வத்திருவருளேயாம்!

பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து, செபம், தவம், தியானம் ஆகியவற்றால் இந் நாடு உய்தி கைகூட வழிசெய்து வைக்கத் திருவருளை வேண்டுதல் செய்து நாமெல்லாம் நம் குல தெய்வங்களைப் பிராத்திப்போமாக.

x x x

ஆத்மீகமான உய்நெறிக்கு உறு துணையாய் இந்து நாகரிகத் துறைப் பேராசிரியர் நியமனம் அமைவதாக என்று,

---

## சபை நிருவாகசபையில் நிறைவேறிய அனுதாபப் பிரேரணைகள்

அறநெறிக் காவலர் முதலியார் முத்துத்தம்பி அவர்கள் சைவபரிபாலன சபையில் ஆயுள் அங்கத்தவராகவும் நிருவாக சபை உறுப்பினராகவும் 25 ஆண்டுகளுக்கு மேலாக உப தலைவராகவும் பணியாற்றிச் சபையின் சீரிய பணிகளுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் நல்கி பொதுக் கூட்டங்களில் எல்லாம் சபையின் வளர்ச்சி பற்றியே பேசுவார். இந்து சாதனப் பத்திரிகை ஒவ்வொரு சைவ சமயியின் வீட்டிலும் இருக்க வேண்டும் என்ற அவாவுடையவர், பழம்பெரும் ஸ்தாபனமாக சைவபரிபாலன சபைக்கு தன் வாழ்நாட்களில் சேகரித்த அரிய பொக்கிஷங்களான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார். அத்தியடி பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவாக இருந்தவர். அன்னரது பிரிவு சைவ பரிபாலன சபைக்கும் சைவ மக்களுக்கும் பேரிழப்பாகும். அன்னரின் ஆத்மா சாந்தியடைய சைவ பரிபாலன சபையினர் பிரார்த்திக்கின்றனர்

திரு. தம்பிப்பிள்ளை செல்லையா அவர்கள் சைவ பரிபாலன சபையாரது சைவப்பிரகாச அச்சியந்திர சாலையில் பல ஆண்டுகளாக அச்சுக் கோப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றிருந்து இறைவனடி சேர்ந்துள்ளார். அவர் அச்சக ஊழியராக மாத்திரம் கடமை ஆற்றாது சபையினது சீரிய பணிகளுக்கு தமது ஒத்துழைப்பை நல்கி விசுவாசமாகப் பணிபுரிந்து, புண்ணியநாச்சி மட தரும பரிபாலனத்தை நடாத்தத் தம்மாலான உதவிகளைச் செய்து குருபூசைப் பொறுப்புக்களை இன்முகத்துடன் ஏற்று எல்லோராலும் விதந்து பாராட்டப் பெற்ற பணபாளராக விளங்கினர். அன்னரது பிரிவு சைவ பரிபாலன சபையினருக்கு மறக்க முடியா நிகழ்ச்சியாகும். இத்தொண்டருடைய சேவைகளை நினைவு கூர்ந்து அன்னருடைய ஆத்மா சாந்தியடைய சைவ பரிபாலன சபையார் பிரார்த்திக்கின்றனர்.

"திரு வே. விசுவலிங்கம் அவர்கள் சைவ பரிபாலன சபையாரது சைவப் பிரகாச அச்சியந்திரசாலையில் ஊழியராகத் தமது 20வது வயதில் சேர்ந்து 52வது வயதில் இறைவனடி சேர்ந்தார், ஊழியராக இருந்த காலத்தில் யாவராலும் மதிக்கப்பெற்ற விசுவாசமான ஊழியராவர். சிறந்த பண்பாளர். புன்னகை தவழும் முகம், சாந்தமும் அமைதியும் குடிகொண்டிருக்கும். மேலாக அமைதியான நடை. மெஷின் மைண்டராகக் கடமையை செவ்வனே ஆற்றி எம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். அன்னரது பிரிவு சைவ பரிபாலன சபையாருக்கு ஓர் பேரிழப்பாகும். அன்னரது ஆத்மா சாந்தி அடைய சைவ பரிபாலன சபையார் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து இறைவனைப் பிரார்த்திக்கின்றனர்.

---

## அம்பிகையின் அருள்

1- ஆம் பக்கதது வளாசசி

நீ. சி. முருகேசு சிவானந்த குருகுல ஆசிரியர் சிவஸ்ரீ சுபபிரமணிய சாஸ்திரியார் உட்படப் பலர் உரையாற்றினர். கலாநிதி கைலாச

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

"வேதநெறி தழைததோங்க
மிகு சைவத்துறை விளங்க"

எனத் தோத்திரஞ் செய்து மேலும பிரார்த்திப்போமாக.

வணக்கம்.

---

## சதானந்தம்

'அருட் கவி' சீ. வி.

இராகம் : மோகனம். தாளம் : ரூபகம்.

பல்லவி

சதா சிவனைச் சதா துதிக்கச்
சதா னந்தமே — தில்லைச் (ச)

அநு பல்லவி

சிதா காச வெளியினிலே
சிவாய நம ஒளியினிலே (ச)

சரணம்

அடாத செய லகத்தை நீங்கி
கெடாத கலை நிலையி லோங்கி
படாத தவ மலையில் தூங்கி
தொடாத மலர் அருளை வாங்கி. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டைக்காலப் பண்ணிசை— அதன்

( 1- ஆம் பக்கத்து வளர்ச்சி )

காட்டியதோடு, இசைத் தமிழ் முறைகளையும் கர்னாடக சங்கீதத்தின் தற்கால வழமையையும், இசைத்தமிழின் பெருமையையும் விளக்கிக் காட்டி "கருணாமிர்த சாகரம்" என்னும் நூலையும் வெளியிட்டார்.

பண்டைக் காலத்திலிருந்தே தென் இந்தியா, இசை நிருத்தம், வாத்தியம் நிறைந்ததும், அங்க அபிநயம் திறமையுடன் செய்யக்கூடிய வல்லவர்கள் நிறைந்த நாடென்றும், தற்போதுள்ள கர்னாடக சங்கீதத்தில் வழங்கும் இராகங்கள், அவற்றின் பிரிவுகள், தாளவகைகள் முதலியவற்றின் வளர்ச்சிக்குத் தேவாரப் பண்கள் மிக்க உதவியாயிருந்தனவென்றும், பற்பல சான்றுகளுடன் சிறப்பாக இந்நூல் எடுத்துக் கூறுகின்றது

சங்கீத அமைப்புடன் கூடிய தேவாரப் பண்களை ஈழத்தில் வேதாரணியத்திலிருந்து வந்த குருக்கள்மாரும் தமிழ்நாட்டிலிருந்து வந்த ஓதுவாமூர்த்திகளும தமிழ்நாடு சென்று ஓதுவாமூர்த்திகளிடமும - தேவாரப் பாடசாலைகளிலும் பண்ணிசை பயின்று வந்தவர்களும், மக்களுக்கு வகுப்புக்கள் நடத்தியும் – கதாப்பிரசங்கள் செய்தும்- தேவாரக் கோஷ்டிகள் வைத்தும் தேவார இசையமைப்பை (வர்ணமெட்டை)ச் சங்கதிகள் குறைத்தும் - சங்கதிகள் இல்லாமலும் வழங்கிப் பாதுகாத்து வந்தார்கள். இப்போது, தேவார இசையமைப்பு அல்லோலகல்லோலப்பட்டுச சீர்குலைந்த நிலையையடைந்துள்ளது

இந்நிலையைக் கண்ட யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார், மனம் வருந்தி - நம்பியாண்டார் நம்பி வகுத்த பண்முறை கட்டளை முறைகளை - அபயகுலசேகர சோழ மன்னன் அரங்கேற்றியதைப்போல - தேவார இசையமைப்பைப் புனருத்தாரணஞ் செய்து - நூல்கள் வெளியிடும் பணியைச் செய்ய ஆலோசிக்கின்றார்கள். இப்பணியை இனிது நிறைவேறுதற்கு, இங்குள்ள சங்கீத வித்துவான்களும் இசை ஆசிரியர்களும் சைவ சமய ஸ்தாபனங்களும் வேண்டிய உதவி ஒத்தாசைகள் புரிந்து சபையாருக்கு ஊக்கமளிப்பது பெரிதும் விரும்பத்தக்கது

வெளியிடப்படத்தக்க நூல் 'திருமுறைப் பண்சுர அமைப்பு' என்பது. இந்நூல், திருநெல்வேலி ஜில்லா குலசேகரன் பட்டணம தேவார வித்துவான் திருவாளர் இ. சுப்பிரமணிய ஓதுவாமூர்த்தி அவர்களின் சகோதரரும், சங்கீத வித்துவான் (பெருங்குளம்) திருவாளர், ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்களின் மாணாக்கரும், சங்கீத ஆசான் தேவாரப் பண்சுர அமைப்பு, தமிழ் நாட்டின சங்கீத ரகசியம் என்னும் நூல்களின் ஆசிரியருமான - இசைவாணர் இ. அப்பாசாமி ஓதுவாமூர்த்தி அவர்களின் சுர அமைப்பாகும். இது, திருமுறைப்பண்கள் முழுவதற்கும் ஓதுவாமூர்த்தி பரமபரையில் வந்த கட்டளை வேறுபாடும, பண்களுக்கு அமைந்துள்ள இராகதாளத்தையும் அனுசரித்து அமைந்துள்ளது. மேலும், இசசுர அமைப்பை நான்கு [illegible]கங்களாககிப் பாலர் தொட்டு விருத்தர் வரை பயிலுதற்கேற்றவாறு, படித்தரஞ் செய்து அமைத்துள்ளார்.

சீர்குன்றியுள்ள பண்ணிசை மீண்டும புதுப் பொலிவுடன் எங்கும பரவி விளங்கச் செய்வது எங்கள் முதற் கடமையாகும். அங்ஙனம் புதுப்பொலிவு பெறுவதற்கு வித்யாதிபதியின் ஆதரவோடு பாடசாலைகளில இசையாசிரியர்கள் வாயிலாக மாணவர்கள் பண்ணிசையைப் பயிலச் செய்வதும், இசைக்கல்லூரிகள் இசைமன்றங்கள் ஆகியவற்றில் மாணவர்கள பண்ணிசையையும் ஒரு பாடமாகப் பயிலச் செயவதும, பண்ணிசைக் கழகம - ஒன்று நிறுவி அங்கு 'திருமுறைப் பண்சுர அமைப்பு' நூலகளையும், சாஸ்திர நூலாகப் 'பண்டிதமணி' - அவர்களியற்றிய 'பண்ணிசை என்னும நூலையும பாடநூலாகக்கிப், பயிற்சி பெற்று வெளியேறுவோருக்குப் 'பண்ணிசையாசிரியர்', 'பண்ணிசைவாணர்' முதலிய பட்டங்களை வழங்கி அவர்களை பண்ணிசை ஆசிரியர்களாகப் பாடசாலைகளில நியமனஞ் செய்வதும் மிகப் பொருத்தமான தூண்டுகோலகளாகும்.

பணி புரிவதே எம் கடன். பயன் இறைவனின் கரங்களில் உள்ளது. அவரின் எவ்வகைத் தீர்ப்பும எம்மைப் பூரணப்படுத்துவதேயாகும். ஈசுவரனின் திருநாமத்துடன் புரியும் பணிகள் யாவும இத்தகைய இலட்சியத்தோடு நாம ஆற்றுவோமாக. உண்மையில் திருவருளின் அநுக்கிரகமுண்டாயின் எமது பற்றற்ற செயலகள் யாவும நிறைந்த சித்தியைத் தந்து நிற்கும.

———



## அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் காரைநகர் கிழக்கு சககலா வோடையில் அடைவுபிடிக்கும் குமாரவேலு கந்தசாமி அவர்களின் அடைவுகடையில் 1-2-197- தொடககம 31-1-1975 வரைக்கும் அடைவு வைதது மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும என்னால் 1976ம் ஹு சித்திரை மீ 7ம் திகதி புதனகிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தல் விறகபபடும்.

காரைநகர்.

வை. ஏ[illegible]

வெந்திஸ் விற்பனையாளர்.

9-2-76





## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: எம் பி 13198

மேரி பெல்யுஎனிதா ஜெயராசா பராயமற்ற தனது அடுத்த நண்பன் செல்லத்துரை றெஜினோட் ஜெபராசா இல: 9 டேவிட் ரோட், யாழப்பாணம். — வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம் கரையூர் அடப்பன் வீதி
(1) சவரிமுத்து பேதுருப்பிள்ளையும் பெண்
(2) மரியம்மா — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13198ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1976-ம் ஆண்டு பங்குனி மாதம் 19-ம் திகதி (19-3-76) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 2680/ம், 28 - 6 - 72 தொடக்கம 28 - 2 - 73 வரைக்கும ரூபாய் 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 364-45 இதில் ரூபாய் 100/- கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை குடியிருப்பு வளவு குளி 4½ மேற்படி குடியிருப்பு வளவு குழி 3 தற்போது ஒரே காணியாயிருக்கிறது. இவ்விரு பிரிவுக்குக் கூடிய குளி 7¾ யும் கல் வீடும், குசினியும். கிணறும் கக்கூசும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு சுவாமபிள்ளை இராயப்பு அந்தோனிபபிள்ளைகதும் பெண் லீலாவுக்குபூரிய ஆதனம். வடக்கு; அடப்பன் ரோட்டு, மேற்கு: செபமாலை மகள் மெற்றலின் மதலேனுவுக்குரிய ஆதனம. தெற்கு: சவரி வயிந்தியின் உரிமைக்காரருக்குரிய ஆதனம. இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

இ. கனகரத்தினம்
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்

35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாண.

11, 9-A5





## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல, M B 13217

(1) மொகமெட் சுல்தான் மொவெட் மொகிதீனும
(2) மொகமெட் சுல்தான் சாகுல சமீட்
நர்: 26, பெரியகடை யாழ்ப்பாணம், வழக்காளி

எதிராக

(1) ராமநாதன் தியாகலிங்கமும் மனைவி
(2) சிவநேசம் இருவரும். நம்: 241/1 (தற்போது நம்பர் 235/6) ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M B 13217-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிககப்படும் ஒரு துண்டுக்காணியை 1976 ம் ஆண்டு சித்திரை மாதம் 7-ம் திகதி (7-4-76) புதன் கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 2979/-ம 6 - 7 - 72 தொடக்கம 20 - 3 - 73 வரைக்கும ரூபாய் 25000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 711/14 இதில ரூபாய் 300/- கோட்டுச் செலவால் கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி கோயிற்பற்று யாழ்ப்பாணம 4ம் பிரிவு இறை- யுபிலி வீடு- (Jubily House) என்று அழைக்கப்படும் காணி 26 குளி (26 Purchase) உம் 252 சதுர அடி வீடும, மேல் வீடும், கிணறும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு இமானுவல் திருச்செல்வம மனைவி மேரி செல்வம் வடக்கு பெருந் தெரு மேற்கு 3-ம குறுக்குத் தெரு தெற்கு அல்பிறட் சுவாமபிள்ளையின மனைவி ரோஸ் சுவாமபிள்ளையின உரிமைக்காரரின் ஆதனம் இதில் பிரிக்கப்படாத (½) அரைப்பங்கு

35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

இ. கனகரத்தினம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும





## கோட்டுக் கொமிஷன் விற்பனவு

வழக்கு இல: M B 13543

(1) நாவாந்துறை காலஞ்சென்ற முருகன நாகன்
(2) பாக்கியம் கைம்பெண் வைரமுத்து நாவாந்துறை – வழக்காளி

எதிராக

நீக்கிலாப்பிள்ளை சூசைப்பிள்ளையின் மகள் மேரி ஜெயராணி நாவாந்துறை எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 13543-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி; பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1976-ம் ஆண்டு சித்திரை மாதம் 8-ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல வட்டி ரூபா 1724/-ம் 15-12-72 தொடககம 31-8-73 வரைக்கும் ரூபா 1000/-க்கு 13 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 426-85 சதம. இதில 400/- ரூபா கொடுபட்டது

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக வண்ணார்பண்ணைக் கோயிலபற்று வண்ணார்பண்ணை இறை (பமமை வேளி) என்று அழைக்கபபடும் காணி [illegible] 5ம 1¼ குளி. செய் பயிர் வான பயிர்களும் இதில் பிரிக்கப்பட்ட [illegible] 2. எல்லை கிழக்கு அன்னம்மா, வடக்கு ரோட்டு, மேற்கு யோசெப் மரியான தெற்கு லோறன சந்தியாக்கோவும முகமது சுலதான அபதுல் காதர். இது அடங்கலும.

இ. கனகரத்தினம்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம.



## பண்ணிசை வகுப்பு

— 0 —

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆரம்பமாகியுள்ளது பண்ணிசை வள்ளல், தாவடியூர், அமரர். செ இராசையாவின் மகனும் மாணவனுமாகிய பண்ணிசைச் செல்வன் திரு எஸ். ஆர். திருஞானசம்பந்தன் இவ் வகுப்பினை நடத்துகிறார்.

### சிரமதானப் பணியில் கனேடிய இளைஞர்கள்

ஈழத்துக்கு வருகை தந்துள்ள கனேடிய இளைஞர்கள் இம்மாதம் 23 ஆம் தேதி கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மாணவர்களுடன் இணைந்து தோட்டப் பயிர்கள் பயிரிட கல்லூரி வளவில் சிரமதானப் பணி ஒன்றை நடத்தவுள்ளனர்,

## (வரப்பெற்றோம்)

### மில்க் வைற் செய்தி

மேலை நாடுகளில் பாரிய தொழிலகங்கள் தங்கட்கு என்றே தனிச் சஞ்சிகைகளை நடாத்தி வருகின்றன. இந்த வகையில் இலங்கையில் லீவர் பிறதர்ஸ் நிறுவகத்தினர் "லீவர் பவுலா" [லீவர் குடும்பம] என்ற பெயரில் ஒரு சஞ்சிகையை நடாத்துகின்றார்கள், காரைநகரில் அமைந்துள்ள 'சீ-நோர்" நிறுவகத்தினரும் இத்தகைய ஏடு ஒன்றை நடாத்துகிறார்கள் இந்த வரிசையில் "மில்க்வைற் செய்தி" இப்பொழுது வெளியாகியுள்ளது.

பயனுள்ள பலவிடயங்கள் சுருக்கமாகவும் அடக்கமாகவும இவ்விதழில் இடம் பெற்றுள்ளன 'ஓரெழுத்து ஒரு மொழி' 'சேரித்தமிழ்' "ஈழத்து உரையாசிரியர்' 'பொலீசு என்றால் என்ன?' இவற்றுள் குறிப்பிடத்தக்கவை

மாதசஞ்சிகையாக அமைந்திருக்கும 'மில்வைற செய்தி' மில்க்வைற் குடும்பத்திற்கு வெளியிலும் படித்துப் பயன பெறத் தக்கதாகும்.

### அம்பிகையின் அருள்

2 ஆம் பக்கத்து வளர்ச்சி

நாதக் குருக்கள் அவர்களின் பதிலுரையையடுத்து திரு, எஸ். முத்துவேற்பிள்ளை அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசினர்.

அதையடுத்து, வட்டுநகர் - துணவிப்பதியைச்சார்ந்த சிவஸ்ரீ செ. மகேசுவரக் குருக்கள் மெய்ம் மறந்த நிலையில் திருமுறை ஓதி யாவரையும பரவசத்துள் ஆழ்த்தினார்கள. இவ் விழா 12-2-76 வியாழன் மாலை நிகழ்ந்தது. ஏராளம் பேர் சமுகமளித்திருந்தனர்.

விழாப் பூர்த்தியானதும் பண்டிதமணி யவர்களைத் தரிசிப்பதற்காக திருநெல்வேலி 'கலைச்சோலை' இல்லத்துக்கு ஸ்ரீ இ. வா. அவர்கள சென்றார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நின்றும் இருந்தும் நிலம்பல பேசினும்
வென்றும் இருந்து விகிர்தனை நாடுவர்
சென்றும் இருந்தும் திருவுடையோரே.

When the three (Gunas) become one (in other words in the transcendent state when no distinction is made between goodness, activity and passivity), devotees possessed of spiritual wealth contemplate on God overcoming (the sense-savages), without caring for what the world (thinks or speaks about them, whether they are seated (in one place). or stand or move about (from place to place).

Hindu Organ

FRIDAY, FEBRUARY 13, 1976

## Thoroughfares Thoroughly Neglected!

RECENTLY there was an item of news that the provisions of the Thoroughfares Ordinance would be invoked to punish anyone who obstructs the legitimate use of roads or causes obstruction to be placed so as to inconvenience pedestrians and vehicles. It is surprising to note that the Authorities have allowed the Thoroughfares Ordinance to remain in cold storage while numerous accidents have happened on the road or by the wayside. The main cause for such accidents has been traced to the negligence of both drivers of moter vehicles and pedestrians due to rash and speeded driving and to the influence of alcohol. But the contributory cause of obstruction from third parties has always been ignored.

The highways in the North are notorious for narrowness and neglected conditions. The widening of roads has been undertaken only in a very small measure and in narrow strips. These thoroughfares have been, therefore, remaining with the same restricted dimensions from the time of their layout. But the traffic thereon has increased severalfold. The omnibus, the lorry, the motor car, the auto-cycle, the pedal bicycle are necessary modes of transport. Pedestrians who increase in number daily do not have the protection of pavements. In such circumstances the availability of space for negotiating transport becomes less. To add to this is the impudence of those who leave behind trunks of trees, logs of wood and dilapidated vehicles on the wayside without any consideration for the public.

The Police in charge of the motor traffic more or less confine their attention to the speed of vehicles, overloading, parking in prohibited areas and unlicensed driving and use of moter vehicles. If only the Police would concern themselves with obstructions on roads the offenders would begin to realise that there is provision in law to be punished for such offences.

It is heartening to note that someone has thought of the Thoroughfares Ordinance and has drawn the attention of those concerned to get on the provisions of the law to have every obstruction on the public road removed.

## Veena Arangetram (debut) of Kumari Malini Srinivasan

( Continued from last issue )

In this context I must say that Miss Malini's father Satha—Srinivasan, who had established his name as an able D. R. O and now an Attorney-at-Law, is a musician him self. He is a connoisseur of fine arts and is highly devoted to (Hindu) Saiva Religion. He thanked profusely Mr. M. M. Abdul Cader, the High Court Judge of Jaffna. Mr. Moorthy Iyer a great musician, and Dr. Jayson of Califortnia ( U. S. A. ) who paid handsome tributes to Kumari Malini for her well deserved performance. Mr. Srinivasan was no less enthusiastic when he thanked the audience who graced the occasion. Blessings—amongst others were received from Mr. Victor Tennekoon, the Chief Justice, Mr. Shiva Pasupathy, Attorney General, Mr. H. W. Jayewardena Veena Virtuso, Thanjavur K. P. Sivanantham, and Veena Varaprasaadi S. Balachander.

St. Appar says in one of his Tevara hymns that Lord Shiva, at the end of the aeon (பேரூழிக்காலம்) while being all alone plays the Veena.

It is hoped that Selvi Malini will transmit her knowledge of Music to other students, who are unable to go to Tamil Nadu Government College of Music, under the prevailing conditions here.

### THE JAFFNA CO-OPERATIVE STORES LTD.

**Whereas Mrs. Thangamma Thambipillai** of Kurumpaciddy, has applied to the Directors of the above - named Company for the issue of a Duplicate Certificate in respect of 6 Ordinary Shares of Rs. 100/- each, numbered: 1331 - 1332; 1782; 2592 - 2594; registered in the name of her late husband Mr. Kandavanam Thambipillai, the originals of which are represented to have been lost or mislaid **Notice is hereby given** that if within two weeks hereof no claim is made to or no objection lodged with the undersigned the Directors will proceed to deal with the application for Duplicate Certificate the originals of which will be deemed to have been cancelled

**T. Somasundaram,**
Secretary,
The Jaffna Co-operative Stores Ltd.
470 Hospital Road,
Jaffna.
6th February, 1976.

## WORLD HINDU CULTURAL AND PHILOSOPHY CONFERENCE

(Continued from last issue)

And today, as the sixty-eighth and sixty-ninth in this glorious line, two great Acharyas of this ancient Pitha, thanks to our great fortune, the elder of whom has made the ultimate sacrifice of His Order, by renouncing Pithadipatya itself, His Holiness Sri Jayendra Saraswati, the present Pithadipati, has during his triumphal tour of the country, visited various places expounding our ancient cultural and religious ideals to the people at large. He has agreed to visit the City of Madras in the very near future It is proposed to hold a World Sanatana Dharma Conference composed of savants and religious leaders of sound learning in our Dharma and drawn from all parts of the world, in March, 1976, at Madras Details of the actual dates and venue will be announced later.

Major objectives of the proposed conference

1. to promote a sense of corporate unity and cultural solidarity among all persons professing and cherishing the Hindu faith;
2. to ensure preservation and growth of Hindu Dharma ideals and culture. It is not designed to be a public meeting Its purpose is limited to providing a forum for the free and faithful interchange of thoughts and ideas concerned to keep active the spiritual heritage of India thereby to serve India and the world. We hope to have at the conference at least four representative delegates professing the Hindu faith from each of the participating countries. It is requested that information regarding the existence, number and activities of the societies professing and propagating Hindu Dharma may be communicated in advance to enable the organisers of the Conference to assess and plan the participation of such representative groups in the Conference. It is suggested that delegates may come to the conference armed with a firm conspectus of the situation in their various countries and an assessment of the scope for improving, strengthening and consolidating Hindu religious and cultural activities in their respective areas.

The objects and ideals of the proposed conference are strictly and exclusively concerned with the preservation and growth of Hindu Dharma and have no sort of relation or concern with policies of any kind. The conference may last for three or five days according to needs and circumstances. The conference will provide an opportunity to delegates to set forth their ideas and the needs of the respective countries with special regard to its objective before His Holiness. They will also receive guidance and suggestions for future work in their areas.

While the expenses in regard to their journeys to and fro will have to be met by the delegates themselves, they will be regarded, as regards board and lodging as guests of the conference. Any further help that delegates may need, will, as far as possible, be afforded too, by the promotees of the conference.

The receipt of this letter may kindly be acknowledged and details regarding the number and names of delegates firmly to participate in the conference may be forwarded to either of the addresses given below. The names and addresses of any relatives and friends of theirs living abroad may also be forwarded to either of the addresses given below.

Manager,
Sri Kanchi Kamakoti Peetam
Jagadguru Sankaracharya Swami Mutt
1, Salai Street, Kanchipuram
(Pim 631502)

Shri T. M. P. Mahadevan,
"Sankara Vihar",
Venkateswaran Colony,
Ayanavaram, Madras 600023.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரக செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday February 13, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org